# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.10.25 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# *ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்)*

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

**ஷைலி கல்விசார் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**


*பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய*
*அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *18.00***    **தபாற் செலவு : ரூபா *15.00***

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஷைலி கல்விசார் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

''ஷைலி கல்விசார் மன்றம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள தாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

ஷைலி கல்விசார் மன்றத்தைக் கூட்டிணைத்தல்

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் தற்போது குறித்த ஷைலி கல்விசார் மன்றத்தின் (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர் களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையயோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''ஷைலி கல்விசார் மன்றம்'' என்னும்

பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும்: அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்: அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) ஆக்கபூர்வமான கல்விசார் நடவடிக்கைகள், தொழில்சார் நடவடிக்கைகள் மற்றும் செயல்திறன் நடவடிக்கைகளை ஆரம்பித்தல், மேம்படுத்தல், அனுசரணை மற்றும் ஒருங்கிணைப்பினூடாக இலங்கையில் வதியும் பிள்ளைகள், வயதுவந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் (செவிப்புலன் குறைந்த, பார்வையிழந்த, மனநலன் மற்றும் உடல்நலன் குறைந்தவர்கள்) அறிவினை விருத்திசெய்வதற்காக புதிய வழிகளை உருவாக்குதல் மற்றும் அவர்களது ஆளுமையை விருத்திசெய்வதற்கு உதவுதல்;

(ஆ) சிறுவர்கள், இளைஞர்கள், வளர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்கேற்ப அவர்களது உடல்ரீதியான மற்றும் மனநிலை விருத்திக்கு உகந்த பின்னணியினை உருவாக்குதல்;

(இ) தமது கலாசாரப் பாரம்பரியங்கள் மற்றும் அடையாளம் தொடர்பாகத் திருப்தி மற்றும் அவை பற்றிய அறிவுடைய நடுநிலையானவர்களை உருவாக்குதற்காகச் சிறுவர்களையும் இளைஞர்களையும் மக்களையும் பயிற்றுவித்தல்;

(ஈ) இலங்கையினுள் பல்வேறுபட்ட இனங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துதல் மற்றும் கருத்து, அறிவு மற்றும் அறிவினைப் பரிமாறிக்கொள்வதற்கான ஏற்படுத்தும் குறிக்கோள் உள்ளடங்கலாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்;

(உ) பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி, தொழிற்பயிற்சி, செயலமர்வுகளை நடாத்துவதற்காகவும் ஆக்கபூர்வமானதும் தொழில்ரீதியான செயற்றிறன் கொண்டதுமான திறன்களை விருத்திசெய்வதற்குமான கற்றல் நடவடிக்கைகளுக்கான தேசிய மத்திய நிலையமொன்றினை ஆரம்பித்தல், அதற்காகத் தனியாகவோ அல்லது தேசிய அல்லது (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட) சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டங்கள், வெகுமதிகளை வழங்குதல்;

(ஊ) சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளினது அறிவினை வளர்ப்பதற்கு இன்றியமையாத இதிகாசம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் உள்நாடு மற்றும் வெளிநாடு தொடர்பான அறிவு மற்றும் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்வதற்காக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(எ) மேற்படி குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு இயைபான அல்லது அதனோடு தொடர்புடைய ஏனைய சகல செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அலுவலர்களை நியமிப்பதற்கும் சேவையில் ஈடுபடுவதற்கும், சேவையிலிருந்து நீக்குவதற்கும் விரும்பத் தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்க தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஐந்து பேரை உள்ளடக்கிய முகாமைத்துவச் சபை ஒன்றின்மூலம் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும். முகாமைத் துவச் சபையின் பதவிக்காலம் இரண்டு வருடங்களாகும்.

(2) ஐந்து பேரடங்கிய மேற்படி முகாமைப் பேரவையில், மன்றத்தின் ஸ்தாபகரான காலஞ்சென்ற விமலசிறி த மெல் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மூவர் உள்ளடங்க வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர்கள் சபையானது இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த நிருவாகசபையின் உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும். அம்முகாமைத்துவக் குழுவிற்கு நியமிக்கப்படும் அல்லது தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் தற்போது வலுவிலுள்ள விதிமுறைகளுக்கேற்ப பதவியில் சேவையாற்ற வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மை

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மையானது சாதாரண உறுப்பினர்களையும் இணை உறுப்பினர்களையும் கொண்டதாகக் காணப்படும்.

(2) எவ்வாறாயினும் சாதாரண உறுப்பினர்கள் கூட்டுத் தாபனத்தில் தற்போது காணப்படும் விதிகளுக்கமைய முகாமைத் துவக் குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதாவது பிரதிபயன் கிடைக்கும்விதமாக இணை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காகத் தகைமைபெறாதவர்கள் பொது உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(3) இணை உறுப்பினர்களுக்காகத் தனிப்பட்ட பதிவேடு ஒன்றினைப் பேணிவருவதுடன் எவ்வாறாயினும் அவர்கள் கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் வாக்களிப்பதற்குத் தகைமை பெறாததுடன் சாதாரண உறுப்பினர்களாகச் சில பிரதிபயன்களை அனுபவிப்பர்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்*

**7.** (1) காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனம் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களினால் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றின் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்கு முன்னைய தினம் மன்றத்தின் வலுவுடையதாகக் காணப்பட்ட விதிகள் இச்சட்டத்தின் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகும் வரையில், இவ்வாசகத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுவதுடன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று, அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும், (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருத்தல்*

**8.** இச்சட்டத்தின் மற்றும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய -

(அ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள

அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும்;

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்யப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தினால் கையகப்படுத்தப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தில் நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

(இ) அத்தகைய ஏதேனும் ஆதனத்தை விற்றல், ஈடுவைத்தல், குத்தகைக்குக் கொடுத்தல், கொடுத்துமாற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல்:

ஆகியவற்றை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமாதலாகுதலும் வேண்டும்.

உறுப்பாண்மைக் கட்டணங்களை அறவிடுவதற்கான தத்துவம்

**9**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக அவ்வுறுப்பினர்களிடமிருந்து குறித்தளவு கட்டணம் அல்லது உறுப்பாண்மைக் கட்டணத்தை அறவிடுதல் சட்டமுறையானதாகும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்

**10**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில் ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக்கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

மன்றத்தினால் செலுத்த வேண்டியவையும் மன்றத்திற்கு செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்

**11.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிலையத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதியன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத் தாபனத்தின் நிதியம்

**12.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நதியைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் கொடைகள், அன்பளிப்பு, நன்கொடை, மரண சாசன தத்துவக் கையளிப்பு, கைமாற்றல்கள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் அல்லது ஏதேனும் நிதிசார் முதலீடுகள் என்ற வகையில் இதனகத்து முன்னர் அல்லது இதன்பின்னர் பெறப்பட்ட

எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்க வேண்டியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தினது நிதியத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்

**13**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்

**14**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக்கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு உடன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் இலச்சினை**

**15.** கூட்டுத்தாபனத்தின் இலட்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் வேறு அலுவலரொருவர் முன்னிலையிலன்றி அன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதலும் வேண்டும்.

**குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்**

**16.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

**ஏதேனும் ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்**

**17.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.